# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

********

முறையீட்டு மனு எண்: 176/2018/பே.

ஆணை நாள். 08–11–2018

திரு. M. ஆறுமுக நயினார்,
உரிமையாளர்,
கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி,
2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை,
மைலாப்பூர்,
சென்னை – 600 004.

-- முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
தொண்டாமுத்தூர் பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்.

-- எதிர் மனுதாரர்.

ஆணை.

திரு.M.ஆறுமுகநயினார், எண்.2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை, மைலாப்பூர், சென்னை–4 என்பவரின் 26.07.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.07.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.176/2018 என எண்ணிடப்பட்டு, மேற்படி முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு.M.ஆறுமுகநயினார், முறையீட்டு மனுதாரர், தனது முறையீட்டு மனுவில், கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் பேரூராட்சியில் 2013–14–ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (IUDM) மேற்கொள்ளப்பட்ட பணி சம்பந்தமான ஒப்பந்த விளம்பரத்தினை மேற்படி பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண்.125/2014,நாள்.3.02.2015ன்படி தனது கிரீன்வேஸ் அட்வர்டைசிங் அண்டு பப்ளிசிட்டி நிறுவனம் மூலம் விளம்பரம் செய்ததாகவும், மேற்படி விளம்பரத்திற்கான கட்டணத் தொகை ரூ.28,464/–க்கான பட்டியல் (எண்.313/2014–15 நாள்.12.02.2015)தொண்டாமுத்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பிவைக்கப்பட்டதெனவும் மேற்படி தொகை கடந்த மூன்றாண்டுகளுக்கும் மேலாக பேரூராட்சியால் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்து தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 11.08.2018 நாளிட்ட அறிவிப்பாணையினைத் தொடர்ந்து, தொண்டாமுத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் 26.10.2018 நாளிட்ட விளக்க அறிக்கையில் மேற்படி விளம்பர நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஒப்பந்த விளம்பரத்திற்கான பட்டியல் தொகை ரூ.28,464/- காசோலை எண்.332886/நாள்.16.10.2018 ன் மூலம் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு தற்போது வழங்கப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மேற்படி நிறுவனத்தின் 25.10.2018 நாளிட்ட கடிதத்தில் மேற்படி நிறுவனத்திற்கு சேரவேண்டிய விளம்பரத் தொகை ரூ.28,464/- மேற்கண்டவாறு பெறப்பட்டமைக்கான ஒப்புதல் வரப்பெற்றுள்ளது.

புகார் மனுவினைத் தொடர்ந்து, இம்முறைமன்ற நடுவத்தால் அறிவிப்பாணைகள் அனுப்பப்பட்ட பின்னர் முறையீட்டு மனுதாரரது கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் தொடர்பான தொடர் நடவடிக்கையினை கைவிடப்படலாமென இம்முறைமன்ற நடுவத்தால் முடிவு செய்யப்பட்டு அவ்வாறே ஆணையிடப்படுகிறது. மேலும், இப்பொருள் குறித்து 26.11.2018 அன்று நிர்ணயிக்கப்பட்டிருந்த விசாரணை நடவடிக்கைகளும் ரத்து செய்து ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 08 -ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

-//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//-

செயலாளர். 30/11/2018

பெறுநர்

1.திரு. ஆ. ஆறுமுக நயினார்,
உரிமையாளர்,
கிரீன்வேஸ் அட்வர்டைசிங் பப்ளிசிட்டி,
2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை,
மைலாப்பூர்,
சென்னை - 600 004.

2.செயல் அலுவலர்,
தொண்டாமுத்தூர் பேரூராட்சி,
கோவை மாவட்டம்-641109.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
கோவை மண்டலம்,
கோயம்புத்தூர்.